ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1917/44 - 2015 ජුනි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.06.04
*1917/44 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (xiv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 ஆம் பிரிவின் (4) (ஆ) என்னும் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (4) (ஆ) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான், இலங்கை கம்பஹா விக்கிராமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமாக சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட கம்பஹா விக்கிராமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளனர் எனவும் திருப்திப்படுவதன் மேல், சொல்லப்பட்ட சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ் இலங்கை கம்பஹா விக்கிராமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ள எவையேனும் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை முறையே பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக கம்பஹா விக்கிராமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு 2015, மே 25 ஆந் திகதியன்று பயனுறும் வகையில் பேராசிரியர் ஜயந்த வெலிஹிந்த என்பவரை இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.

சரத் அமுனுகம,
உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்.

கொழும்பு,
*2015, யூன் 03.*

*6 - 535*


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*